மாலை முரசு

பக்கங்கள் 16

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 புரட்டாதி 16 செவ்வாய்க்கிழமை 03.10.2023 அதிர்வு 64

## A/L பரீட்சை திகதி குறித்து சில தினங்களில் அறிவிப்பு

2023 ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கான புதிய திகதிகள் இன்னும் சில தினங்களில் அறிவிக்கப்படும் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். 05▶





# வடக்கு - கிழக்கு நீதிமன்றங்கள் முடக்கம்

## சட்டத்தரணிகள் கவனவீர்ப்புப் போராட்டம்

(நமது பிராந்திய நிருபர்கள்)

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜாவுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராகவும், சட்டத்துறையிலும் நீதித்துறையிலும் இடம்பெறும் அத்துமீறல்களை நிறுத்தக் கோரியும் வடக்கு, கிழக்கு சட்டத்தரணிகள் இன்று நீதிமன்றப் பணிப்புறக்கணிப்பை மேற்கொண்டனர். அத்துடன் தத்தமது நீதிமன்றங்களுக்குமுன்பாகஅவர்கள்கவனவீர்ப்புப் போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, 04▶



# நீதிபதிக்கு நீதி கேட்டு

# முல்லையில் பேரணி



## அணிதிரண்டனர் சட்டத்தரணிகள்



- முல்லைத்தீவு நிருபர் -

அழுத்தங்கள் மற்றும் உயிர் அச்சுறுத்தலால் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜா பதவி விலகி நாட்டைவிட்டு வெளியேறியுள்ள நிலையில், அவருக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக வடக்கு மாகாணங்களிலுள்ள சட்டத்தரணிகள் இணைந்து மாபெரும் எதிர்ப்புப் பேரணியை இன்று முல்லைத்தீவில் முன்னெடுத்தனர். 04▶

# சர்வதேச விசாரணைக்கு இடமளிக்காது இலங்கை

## ஜனாதிபதி ரணில் திட்டவட்ட அறிவிப்பு



"உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் உட்பட எந்தவொரு விவகாரத்திலும் இலங்கை அரசு சர்வதேச விசாரணைக்கு இடமளிக்காது."

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.

ஜேர்மனி தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த நேர்காணலிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் 05▶

# கைவிரித்தார் நீதி அமைச்சர்

## சபையில் விதண்டாவாதம்



"முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியின் பதவி விலகல் தொடர்பான எந்தப் பாறுப்பையும் அரசின் மீது சுமத்த வேண்டாம். நீதிபதி தொடர்பான பிரச்சினையை விசாரணை 05▶

# ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சித் தேர்தல்: ஆரம்ப வேலைக்கு 100 கோடி ரூபா செலவு!

## அரசு செலவிட்டது என்கிறது நிதி அமைச்சு

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டு ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் ஆரம்ப நடவடிக்கைகளுக்காக அரசு 100 கோடி ரூபா நிதியை செலவிட்டுள்ளது என்று நிதி அமைச்சின் தரவுகள் தெரிவிக்கின்றன.

தேர்தலை நடத்துவதற்கான தேர்தல்கள் ஆணைக் குழுவின் தேவையாக 9 பில்லியன் மற்றும் அச்சிடும் செலவு மட்டும் 1.827 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. இந்த நிலையில், அதில் 1 பில்லியன் (100 கோடி) ரூபா ஏற்கெனவே செலவிடப்பட்டுள்ளது என்று நிதி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் கால வரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது. தேர்தலுக்கு வழங்கப்பட்ட வேட்புமனுக்களை இரத்து செய்ய அரசு திட்டமிட்டுள்ளது.

எதிர்வரும் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் இரத்து செய்யப்பட்டால் மாத்திரமே வைப்புத் தொகையை மீளப்பெற முடியும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு வட்டாரங்கள் வலியுறுத்துகின்றன.

வேட்புமனுக்கள் இரத்துச் செய்யப்படுவதற்கு அரசு இது தொடர்பான சட்டமூலம் ஒன்றை நாடாளுமன்றத்தில் முன்வைக்க வேண்டும். இல்லையெனில் வர்த்தமானி அறிவித்தல் மூலமாகவே வேட்புமனுக்கள் இரத்து செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை: வரும் 15ஆம் திகதி நடத்த முடிவு

2023 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை நடத்தப்படும் திகதி குறித்து பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்படி, தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை எதிர்வரும் 15 ஆம் திகதி நடத்தப்படும் என்று திணைக்களம் தெரிவித் துள்ளது. அதன்படி நாடளாவிய ரீதியில் 2 ஆயிரத்து 888 பரீட்சை நிலையங்களில் பரீட்சை நடைபெறும் என்று பரீட்சைகள் திணைக்களம் மேலும் அறிவித்துள்ளது.

# எரிவாயு விலை மாற்றம்: 5 ஆம் திகதியே முடிவு!

சமையல் எரிவாயு விலையில் திருத்தம் மேற்கொள்ளப்பட உள்ளது என்று லிட்ரோ எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் ஐந்தாம் திகதி இந்த திருத்தம் மேற்கொள்ளப்பட உள்ளதாக லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தற்போதைய விலையைத் தொடர்ந்தும் பேண முடியுமா என்பது குறித்து ஜனாதிபதி செயலகத்துடன் பேச்சு முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் 12.5 கிலோ கிராம் எடையுடைய எரிவாயு சிலிண்டர் ஒன்றின் விலை 145 ரூபாவால் உயர்த்தப்பட்டது.

ஏனைய எடைகளை கொண்ட சிலிண்டர் வகைகளின் விலையும் ஒப்பீட்டளவில் அதிகரிக்கப்பட்டது.

தற்போது உலக சந்தையில் எரிவாயுவின் விலை அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

எனினும் சமையல் எரிவாயுவின் விலையைச் சீராகப் பேணுவதற்கு முயற்சிக்கப்படுகிறது என்று அந்த உயர் அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

# திருகோணமலையில் கஞ்சா வளர்த்த இளைஞன் பொலிஸாரிடம் மாட்டினார்!

திருகோணமலை – நிலாவெளி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சிறுபிட்டிகுளம் பகுதியில் மரவள்ளி தோட்டத்தில் கஞ்சா செடிகளை வளர்த்த இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நபர் நேற்றிரவு (02) கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலுக்கு அமைவாக பொலிஸார் விசேட சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

இதன்போது எட்டு கஞ்சா செடிகள் கண்டுபிடிக்கப்பட்டன என்றும் சம்பவம் தொடர்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை கஞ்சா செடிகளுடன் திருகோணமலை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர் என்று நிலாவெளி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# மின் கட்டணம் அதிகரித்தால் பேக்கரி உணவும் விலையேறும்!

## பேக்கரி உரிமையாளர் சங்கத் தலைவர் தெரிவிப்பு

இலங்கையில் மீண்டும் மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டால், பேக்கரி உற்பத்திப் பொருள்களின் விலையை அதிகரிக்க நேரிடும் என்று சிறு மற்றும் நடுத்தர அளவிலான பேக்கரி உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

காலியில் நேற்று (02) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு அதன் தலைவர் கமல் பெரேரா இதனைத் தெரிவித்தார்.

தற்போது மீண்டும் மின் கட்டணத்தை உயர்த்துவது குறித்து ஆராயப்பட்டு வருகின்றது.

இந்த மாதம் முதல் மின் கட்டணத்தைத் திருத்தியமைக்குமாறு இலங்கை மின்சார சபை, பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்திருந்தது.

எரிபொருள் விலையேற்றத்தால் தமது தொழிற்துறைக்கு பாரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று இதன் போது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறான சூழலில், மீண்டும் மின் கட்டணம் உயர்த்தப்படுமானால் பேக்கரி உற்பத்தி பொருள்களின் விலைகளை அதிகரிக்க வேண்டி ஏற்படும் என்று கமல் பெரேரா குறிப்பிட்டுள்ளார்.



# யாழில் நாளை மனித சங்கிலிப் போராட்டம்; ஆதரவு கோரி இன்று துண்டுப்பிரசுரங்கள்!

(எஸ்.நிதர்ஷன்)

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி விவகாரத்தில் கண்டனத்தை வெளிப்படுத்தும் வகையில் யாழ்ப்பாணத்தில் நாளை முன்னெடுக்கப்படவுள்ள மாபெரும் மனித சங்கிலிப் போராட்டத்துக்கு ஆதரவு கோரி இன்று யாழ்ப்பாணத்தின் பல்வேறு இடங்களில் துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

இதன்போது தமிழ் மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்) தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன், புளொட் அமைப்பின் முக்கியஸ்தரும் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினருமான பா.கஜதீபன், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் என்.சிறீகாந்தா, தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) யாழ். மாவட்டப் பொறுப்பாளரும் முன்னாள் வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளருமான தியாகராஜா நிரோஷ் உள்ளிட்ட அரசியல் பிரதிநிதிகள் கலந்துகொண்டு துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தனர்.

நாளை காலை 9 மணிக்கு மருதனார் மடத்தில் ஆரம்பித்து யாழ்ப்பாணம் நகர் வரையில் நீளுகின்ற மாபெரும் மனித சங்கிலிப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்தப் போராட்டத்துக்கு ஆதரவாக இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ), ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழ்த் தேசியக் கட்சி, தமிழ் மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்), தமிழ் மக்கள் கூட்டணி மற்றும் ஜனநாயகப் போராளிகள் கட்சி என்பன அழைப்பு விடுத்துள்ளன.









# நீதிபதிக்கு நீதி கேட்டு முல்லையில் பேரணி






(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முற்பகல் 11 மணியளவில் முல்லைத் தீவு நீதிமன்றம் முன்பாக ஆரம்பித்த எதிர்ப்புப் பேரணி முல்லைத்தீவு நகர சுற்றுவட்டத்தை அடைந்து மீண்டும் நீதிமன்ற வளாகத்துக்கு முன்பாக வந்து அங்கு கண்டனப் போராட்டத்துடன் நிறைவு பெற்றது.

இந்தப் பேரணியில் பங்கேற்ற சட்டத் தரணிகள், "நீதித்துறை மூலம் நீதியான சட்டவாட்சி நடைமுறைப்படுத்துவதைத் தடுக்காதே!", "நீதித்துறையின் சுதந்திரத் துக்குக் களங்கத்தை ஏற்படுத்தாதே!", "கௌரவ நீதிபதிகளின் கடமையில் தலை யிடாதே!", "நீதி அமைச்சரே அநீதிக்குத் துணைபோகாதே!", "நீதிபதிகளின் பாது காப்பைக் குறைக்காதே", "நீதித்துறை யைச் சுயாதீனமாகச் செயற்பட விடு", "கௌரவ நீதிபதிகளே சட்டத்தரணிகளா கிய நாங்கள் உங்களுடன்", "நீதித்துறைச் சுதந்திரத்தைப் பாதுகாப்போம்" போன்ற பல்வேறு வாசகங்கள் தாங்கிய பதாதை களைத் தாங்கி இருந்தனர்.

முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், கிளி நொச்சி, வவுனியா, மன்னார் உள்ளிட்ட வடக்கு மாகாணங்களில் உள்ள அனைத்து சட்டத்தரணிகள் சங்கங்களின் சட்டத் தரணிகளும் இணைந்து இந்தப் போராட் டத்தை முன்னெடுத்திருந்தனர்.

# வடக்கு - கிழக்கு நீதிமன்றங்கள் முடக்கம்









(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, அம் பாறை ஆகிய மாவட்டங்களில் உள்ள நீதிமன்றங்களில் சட்டத்தரணிகள் எவ ரும் இன்று முன்னிலையாகவில்லை. வழக்குகளுக்காக நீதிமன்றங்களுக்குச் சமூகளித்த பொதுமக்கள் வீடு திரும்பினர். இதனால் நீதிமன்றங்கள் இன்று செய லிழந்து வெறிச்சோடிக் காணப்பட்டன.

வடக்கு, கிழக்கு நீதிமன்றங்களுக்கு முன்பாக இன்று கவனவீர்ப்புப் போராட்டத் தில் ஈடுபட்ட சட்டத்தரணிகள் கருத்துத் தெரிவிக்கையில்,

"இலங்கையில் நீதித்துறையின் சுயாதீனத்தன்மை தொடர்ந்தும் பாதிக் கப்பட்டு வருவது நீதித்துறையைக் கேள்விக்குட்படுத்தும் ஒரு செயற்பாடா கும். இதனைத் தடுக்கும் முகமாக நாம் இன்று இந்தப் பணிப்புறக்கணிப்பை மேற் கொண்டு கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுக்கின்றோம். நீதித்துறையில் அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுவது மற்றும் அடக்கி வாசிக்க எடுக்கப்படும் முயற்சிகள் நிறுத்தப்பட வேண்டும்.

நாடாளுமன்றச் சிறப்புரிமையை வைத்து நீதித்துறையும் நீதித்துறை சார்ந்தவர்களையும் நாடாளுமன்றத் தில் கடந்த காலங்களில் விமர்சனம் செய்யப்பட்டுள்ளது. சபாநாயகரிடம் முன் அனுமதி பெற்று எவரும் உரையாற்ற வில்லை. சபாநாயகரும் அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கவில்லை. இந்தச் செயல்கள் தடுக்கப்பட வேண்டும். நீதித் துறைக்கும் சட்டவாக்கத்துறைக்கும் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்துவ தற்காகவே இன்று நாம் குரல் கொடுத் துக் கொண்டிருக்கின்றோம். நீதித்துறை, சட்டவாக்கத்துறை, நிறைவேற்றுத்துறை என்பன அதற்குரிய சுயாதீனத்தன் மையோடு தொடர்ந்தும் செயற்படுவதற்கு இடமளிக்கப்பட வேண்டும்.

முல்லைத்தீவு மாவட்ட மேலதிக மாவட்ட நீதிபதி சரவணராஜாவின் பதவி விலகல் குறித்து அரசு சுயாதீனமான புலன் விசாரணை ஒன்றை மேற்கொள்ள வேண்டும். இதற்கென சுயாதீன ஆணைக் குழு ஒன்றை நிறுவி பரிபூரணமான விசாரணையை மேற்கொண்டு அறிக் கையை வெளியிட வேண்டும் என்றும் நாம் விநயமாகக் கேட்டுக்கொள்கின் றோம்." – என்றனர்.

### ஆனைக்கோட்டை யூனியனுடன் இறுதிச் சமராடப்போவது யார்?

# இளவாலையில் இன்று பெருஞ்சமர்

# பாடும்மீன் - சென். மேரிஸ் மோத ரெடி

இளைவாலை வருத்தப்படாத வாலிப சங்கம் நடத்திவரும் உதை பந்தாட்டச் சமரின் இரண்டாவது அரையிறுதிச் சமர் இன்று இரவு நடைபெறவுள்ளது.

இளவாலை வருத்தப்படாத வாலிப சங்கம், தமது 10ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு, அணிக்கு 09 பேர் கொண்ட “வாலிப கிண்ணம்” உதை பந்தாட்டத் தொடரை நடத்தி வருகின்றது.

இதில், இன்று இரவு 7.30 இரண்டாவது அரையிறுதியாட்டம் நடைபெறவுள்ளது. இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள இந்த ஆட்டத்தில் குருநகர் பாடும் மீன் அணியை எதிர்த்து நாவாந்துறை சென். மேரிஸ் அணி மோதவுள்ளது.



இரு அணிகளும் இரு துருவங்களாக விளங்கும் நிலையில், இன்றைய ஆட்டத்தில் அனல் பறக்கும் நிலையே உள்ளது.

இதற்கிடையே, ஏற்கனவே நடந்து முடிந்த முதலாவது அரையிறுதி யாட்டத்தில், சமனிலை தவிர்ப்பு உதையில் இளவாலை யங் கென்றிசியன் அணியை வீழ்த்தி ஆனைக்கோட்டை யூனியன் அணி இறுதிப்போட்டிக்கு நுழைந்துள்ளது.

இந்த அணியுடன் இறுதி யாட்டத்தில் மோதப்போகும் அணி எது என்பதைத் தீர்மானிக்கும் போட்டியாக இன்றைய இரண்டாவது அரையிதி ஆட்டம் அமையவுள்ளது.

இன்றைய ஆட்டம் ரசிகர்களுக்குப் பெரு விருந்தாக அமையும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமிருக்காது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**கைவிரித்தார்...**

நடத்துவதற்கு அரசுக்கோ அல்லது ஜனாதிபதிக்கோ எந்த அதிகாரமும் இல்லை. அது தொடர்பான விசாரணை நடத்தும் அதிகாரம் நீதிச் சேவைகள் ஆணைக்குழுவுக்கு மட்டுமே உண்டு.”

– இவ்வாறு நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இன்று முல்லைத் தீவு மாவட்ட நீதிபதியின் பதவி விலகல் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ விசேட கூற்றொன்றை முன்வைத்து எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குறிப்பிடுகையில்,

“முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியின் பதவி விலகல் பாரிய விடயம். அதே போன்று நீதிமன்றத்தின் சுயாதீனம் தொடர்பான பயங்கர விடயமாகும். நீதிபதி வழங்கிய உத்தரவுகள் காரணமாக அவருக்கு மரண அச்சுறுத்தல் உட்பட பல்வேறு அழுத்தங்கள் தொடர்பாக மிகவும் பயங்கரமான அறிவிப்பொன்றை அவர் விடுத்திருக்கின்றார். அதனால் அவரின் அறிவிப்பு தொடர்பாக சுயாதீன விசாரணை மேற்கொண்டு இதன் பின்னணியில் இருக்கும் மறைமுக சக்திகளை வெளிப்படுத்த வேண்டும்.” – என்றார்.

நீதி அமைச்சர் தாடெர்ந்து பதிலளிக்கையில்,

“முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி வெளிநாடொன்றுக்குச் சென்ற பின்னரே அவரிடமிருந்து நீதிச் சேவைகள் ஆணைக்குழுவுக்குக் கடிதம் ஒன்று கிடைத்துள்ளது.

அதில் அவருக்கு ஏற்பட்டுள்ள மன அழுத்தம் மற்றும் அச்சுறுத்தல் காரணமாகத்தான் பதவி விலகுவதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவருக்கு மன அழுத்தம், அச்சுறுத்தல் இருக்குமானால் அவர் வெளிநாடொன்றுக்குச் சென்று கடிதம் அனுப்ப வேண்டியதில்லை.

அத்துடன் நீதிபதி ஒருவருக்கு அச்சுறுத்தல் இருக்குமானால் அவ்வாறு அச்சுறுத்தல் விடுத்தவர் யாராக இருந்தாலும் அவரை நீதிமன்றத்துக்கு அழைப்பு விடுக்கலாம். பிடியாணை கட்டளை விடுக்கும் அதிகாரம் அவருக்கு இருக்கின்றது.

அதேபோன்று குறித்த நபருக்கு எதிராக வழக்குத் தொடுக்கும் அதிகாரம் நீதிபதிக்கு இருக்கின்றது. அந்த அதிகாரத்தை அவர் பயன்படுத்தாவிட்டால் அதன் பொறுப்பை அவர் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மேலும் நீதிபதியின் பதவி விலகல் தொடர்பிலான எந்தப் பாறுெப்பையும் அரசின் மீது சுமத்த வேண்டாம். ஏனெனில் நீதிபதிகளின் ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பான அதிகாரம், நியமன அதிகாரம் என அனைத்தும் நிர்வகிக்கப்படுவது நீதிச் சேவைகள் ஆணைக்குழுவாலாகும். நீதிச் சேவைகள் ஆணைக்குழு அரசமைப்பின் பிரகாரம் அமைக்கப்பட்ட சுயாதீன ஆணைக்குழுவாகும்.

அதனால் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி தொடர்பான பிரச்சினையை விசாரணை நடத்துவதற்கு அரசுக்கோ, ஜனாதிபதிக்கோ எந்த அதிகாரமும் இல்லை. அந்த அதிகாரம் இருப்பது நீதிச் சேவைகள் ஆணைக்குழுவுக்கு மாத்திரமாகும்.

எனவே, யாருக்காவது இது தொடர்பில் பிரச்சினை இருக்குமானால் அவர்கள் நீதிச் சேவைகள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்து, அது தொடர்பில் பதில் ஒன்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

பிரதம நீதியரசர் தலைமையிலான அந்த ஆணைக்குழுவுக்கு உத்தரவிடவோ அதில் தலையிடவோ அரசுக்கு எந்த அதிகாரமும் இல்லை. ஆணைக்குழு தேவையெனில் அது தொடர்பில் விசாரணை நடத்தி பதில் ஒன்றை வழங்கும்.” – என்றார்.

**A/L பரீட்சை**

பரீட்சைகள் நடைபெறும் திகதிகளைப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எதிர்வரும் சில தினங்களில் அறிவிப்பார் என்று கல்வி அமைச்சர் நாடாளுமன்றத்தில் இன்று தெரிவித்தார்.

2023 ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை எதிர்வரும் நவம்பர் 27 ஆம் திகதி முதல் டிசம்பர் 20 ஆம் திகதி வரை நடைபெறுவதற்கு முன்னர் திட்டமிடப்பட்டிருந்து.

எனினும், உயர்தரப் பரீட்சை திட்டமிடப்பட்டிருந்த திகதிகளில் நடைபெறாது எனவும், பரீட்சை ஒத்திவைக்கப்பட்டுள்ளது எனவும் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த கடந்த மாதம் நாடாளுமன்றத்தில் அறிவித்திருந்தார்.

மாணவர்கள் பரீட்சைக்குத் தயாராகுவதற்குப் போதிய கால அவகாசம் இல்லை என ஆளும் மற்றும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் விடுத்த கோரிக்கையை அடுத்து பரீட்சை பிற்போடப்பட்டது எனவும் கல்வி அமைச்சர் அப்போது தெரிவித்திருந்தார்.

**சர்வதேச விசாரணைக்கு...**

என முன்வைக்கப்பட்டுவரும் கோரிக்கைகள் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

“சனல் 4 தொலைக்காட்சியின் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் குற்றச்சாட்டுக்களை இலங்கை முழுமையாக நம்பவில்லை. இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இலங்கை அரசு சர்வதேச விசாரணையை நடத்தாது.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் வெளித் தரப்பின் தலையீடு இல்லை என அமெரிக்கா எப்.பி.ஐ. அறிக்கை வழங்கியுள்ளது.

இந்தியா, சீனா, ஆஸ்திரேலியா, பிரிட்டன் உள்ளிட்ட நாடுகளின் இரகசியப் பொலிஸாரும் அறிக்கைகளை வழங்கியுள்ளனர்.

எனவே, உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் உட்பட இலங்கையில் எந்தவொரு விடயத்துக்கும் சர்வதேச விசாரணை நடத்தப்படாது” – என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ஜனநாயக விரோதி ரணில்

அடுத்த ஆண்டு செப்டம்பரில் - இன்னும் 11 மாதங்களில் - நடத்தப்பட வேண்டிய ஜனாதிபதித் தேர்தலுக்கான செலவின ஒதுக்கீடாக ஆயிரத்து நூறு கோடி ரூபாவை அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் ரணிலின் அரசு ஒதுக்கி இருப்பதாக செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

ஆகவே, அரசமைப்புச் சட்டம் மற்றும் நாட்டின் ஏனைய சட்டங்களினால் தேவைப்படுத்தப்பட்ட படி அடுத்த ஆண்டில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் என சில வட்டாரங்கள் திருப்தி - நம்பிக்கை - தெரிவிக்கின்றன.

ஜனநாயக விரோதத் தலைவரான ரணில் விக்கிரமசிங்கவின் நரித்தந்திரோபாய செயல்களின் ஆழ,அகலம் அறியாதவர்களின் கணிப்பீடு - நம்பிக்கை - இது.

நாடு முழுவதிலும் உள்ளூராட்சித் தேர்தல்கள் கடந்த மார்ச்சில் நடத்தப்பட்டிருக்க வேண்டும். அதற்கான நிதி கூட இந்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன் கீழ் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை உரிய காலத்தில் நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. உத்தியோபூர்வமாகத் தேர்தல் அறிவிக்கப்பட்டது. வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. வாக்குச் சீட்டுகள் கூட எழுபது வீதம் அச்சிடப்பட்டு விட்டன. ஒரு பகுதியாக சுமார் 100 கோடி ரூபா அதற்கு செலவிடப்பட்டும் விட்டது.

ஆனால் தேர்தலுக்கான எஞ்சிய செலவுகளுக்குரிய நிதியை நாட்டின் நிதி அமைச்சர் என்ற முறையில் விடுவிக்காமல் தடுத்தமை மூலம் அந்தத் தேர்தலுக்கு நிரந்தர ஆப்படித்து விட்டார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

ஏழு மாதங்களுக்கு முன்னர் நடந்திருக்க வேண்டிய தேர்தல் இனி நடக்குமோ என்பது சந்தேகத்துக்குரியதாகிவிட்டது

இந்த உள்ளூராட்சித் தேர்தல் அறிவிக்கப்பட்ட போது, அதற்கான நிதியை வெட்டி, அதனை நடத்த விடாமல் தான் தடுக்க போகின்றார் என்பது நிதி அமைச்சரான ரணில் விக்கிரமசிங்கவுக்கு நன்கு தெரியும். அப்படி இருந்தும் தேர்தல் அறிவிக்கப்பட்டு, வேட்பு மனு ஏற்கப்பட்டு, வாக்கு சீட்டுகள் கணிசமான அளவு அச்சிடப்பட்டு, வேட்பாளர்கள் பிரசாரப் பணிகளுக்குப் பெரும் தொகைப் பணத்தை செலவிடும் வரை வாயை மூடி அம்சடக்காகப் பார்த்திருந்து விட்டுத்தான் கடைசி நேரத்தில் 'நிதி வெட்டு' என்ற துரும்புச் சீட்டைத் தூக்கி அடித்து, உள்ளூராட்சித் தேர்தலை நடத்த விடாமல் தம் ஜனநாயக விரோத அதிகாரப் போக்கை நிலைநாட்டினார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

நாட்டில் கடந்த ஆறு, ஏழு ஆண்டுகளாக மாகாண சபைத் தேர்தல்கள் இல்லை. அதற்கும் நிரந்தரமாக ஆப்படித்த பிரதான சூத்திரதாரி - ஜனநாயக விரோதி - அவரே என்பது நாடறிந்த உண்மை.

இனி, அடுத்த ஆண்டு கட்டாயம் நடக்க வேண்டிய ஜனாதிபதி தேர்தலுக்கு இப்போது வரவு - செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டாலும், மக்களின் வாக்களிக்கும் உரிமைக்கு வேட்டு வைக்கும் ஜனநாயக விரோதச் செயலை அண்மைக் காலமாக முழு எடுப்பில் நடைமுறைப்படுத்தி வரும் ரணில் விக்கிரமசிங்க, அத்தேர்தலுக்கும் தமது நரி தந்திர நடவடிக்கை மூலம் ஆப்படித்து, அதன் மூலம் தமக்குக் கிடைத்த குறை நிரப்புகால ஜனாதிபதி பதவியில் தொடர்ந்து நீடிக்க எத்தனித்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

## அதிகூடிய ஏற்றுமதி வருமானம் ஓகஸ்ட் மாதத்தில் பதிவாகியது

### மத்திய வங்கியின் அறிக்கையில் சுட்டிக்காட்டு

2023 ஆம் ஆண்டில் பெற்றுக் கொள்ளப்பட்ட அதிகூடிய ஏற்றுமதி வருமானம் கடந்த ஓகஸ்ட் மாதத்திலேயே பதிவாகியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி 1,119 மில்லியன் டொலர்களாக ஏற்றுமதி வருமானம் பதிவாகியிருந்தது என்று மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இது கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் ஈட்டிய ஏற்றுமதி வருமானத்துடன் ஒப்பிடுகையில் 8.7 வீதமான வீழ்ச்சியாகும் என்று இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நாட்டின் 2023 ஆண்டில் தற்போது வரையான ஏற்றுமதி வருமானம் 8,010 மில்லியன் டொலர்களாகப் பதிவாகியுள்ளது.

2022 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில் இது 10.1 வீத வீழ்ச்சியாகும்.

சர்வதேச சந்தையில் ஆடைகளுக்கான தேவை குறைந்தமையே ஏற்றுமதி வருமானம் குறைந்தமைக்கான பிரதான காரணம் என்று இலங்கை மத்திய வங்கி மேலும் தெரிவித்துள்ளது.

## தேசிய ரீதியில் சுனாமி ஒத்திகை!

(சியாத்.எம்.இஸ்மாயில் )

தேசிய ரீதியிலான சுனாமி ஒத்திகை செயற்றிட்டம் திருகோணமலை, காலி, மாத்தறை ஆகிய மாவட்டங்களில் நாளை புதன்கிழமை (04) காலை 9 மணிமுதல் முன்னெடுக்கப்படவுள்ளது.

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் ஏற்பாட்டில் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் உள்ள சகல பிரதேசங்கள் தோறும் மக்களை விழிப்புணர்வூட்டும் வகையில் பொது அறிவித்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன.

இதனால் பொது மக்கள் பீதியடைய தேவையில்லை என்று அம்பாறை அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரதி பணிப்பாளர் எம்.ஏ.சீ.எம். றியாஸ் தெரிவித்தார்.

அனர்த்தம் அபாயகரமானது அதனால் பூரண விழிப்புணர்வு மற்றும் பயிற்சிகள் பொது மக்கள் மத்தியில் காணப்படுமாயின் உயிர்ச்சேதம் மற்றும் அழிவுகளை குறைத்துக்கொள்ள முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தூக்கில் தொங்கியவாறு சிறுவன் சடலமாக மீட்பு!

(மஸ்கெலியா நிருபர்)

நோர்ட்டன் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஹட்டன், கிளவட்டன் தோட்ட பிள்ளையார் ஆலய அறையொன்றில் இருந்து துஸக்கில் தொங்கியவாறு சிறுவன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

16 வயது சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்று நோட்டன் பொலிஸ் தெரிவிக்கின்றனர்.

நோட்டன் பொலிஸாருக்கு கிடைக்க பெற்ற தகவலை தொடர்ந்து அவ் இடத்துக்கு பொலிசார் சென்றுள்ளனர். இன்று காலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஆலயத்தின் குருக்களின் உதவியாளராக இருந்து வந்த சிறுவன் பலாங்கொடை பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்று தெரியவந்துள்ளது.

சம்பவத்துக்கான காரணம் கண்டறியப்படாத நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர் என நோட்டன் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

# வாகன அனுமதிப் பத்திரங்களை வீட்டில் இருந்தே இனிப் பெறலாம்

## தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தகவல்

வாகன அனுமதிப் பத்திரங்களை ஒக்ரோபர் 7ஆம் திகதி முதல் மக்கள் வீட்டிலிருந்தே பெற்றுக்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மேல் மாகாண மக்கள் தவிர்ந்த அனைத்து மாகாண மக்களும் இந்த வசதியை பெற்றுக் கொள்ள முடியும் என்று தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (02) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் கருத்து தெரிவித்த இராஜாங்க அமைச்சர்,

இந்தப் புதிய முறையின் மூலம் மோட்டார் வாகன வருமான அனுமதிப் பத்திரங்களை வீட்டிலிருந்தே பெற்றுக் கொள்ள முடியும்.



தற்போது வாகன வருவாய் அனுமதிப் பத்திரத்தை இணையவழி சேவை ஊடாக வழங்கும் திட்டத்தை ஆரம்பித்துள்ளோம்.

எதிர்வரும் 7ஆம் திகதி முதல் எந்தவொரு மாகாணத்தின் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் இணையத் தளத்துக்கும் சென்று வாகன வருமான அனுமதிப் பத்திரத்தை இணையத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

மேல்மாகாண இன்னும் சேர்க்கப்பட வில்லை, மற்ற 8 மாகாணங்களும் தயாராக உள்ளன. அனைத்து அரச சேவைகளுக்கான கட்டணங்களும் இணையவழி மூலம் செலுத்தப்படும்.

மாநகர சபைகள், மாவட்ட செயலகங்கள் உட்பட 9 அரச நிறுவனங்களை தெரிவு செய்து, முன்னோடி திட்டத்தை தொடங்கி நடைமுறைப்படுத்தியுள்ளோம்.

வாடிக்கையாளர்களுக்கு வீட்டிலிருந்தே அனைத்து சேவைகளையும் இணையவழி மூலம் செலுத்தும் முறையை நாங்கள் தயார் செய்துள்ளோம்.

அடுத்த ஆண்டு மார்ச் 30 ஆம் திகதிக்குள் 100 வீதம் இணையவழி மூல கட்டண சேவைகளை வழங்குவோம் என்று நம்புகிறோம்.- என்று தெரிவித்துள்ளார்.

# மலேசியாவில் நடந்த முக்கொலை: சந்தேக நபர் ஒருவர் உயிரிழந்தார்!

## பொலிஸ் காவலில் இருந்தபோது நிகழ்ந்தது

மலேசியாவின், செந்துலில் மூன்று இலங்கையர்கள் கொல்லப்பட்ட சம்பவம் அந்நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

இந்த நிலையில் கொலை சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட் இலங்கைத் தம்பதியில் கணவர் உயிரிழந்துள்ளார்.

பொலிஸ் காவலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் அவர் உயிரிழந்துள்ளார் என்று கோலாலம்பூர் பொலிஸ் தலைமையக அதிகாரி டத்தோ அல்லுடின் அப்துல் மஜிட் தெரிவித்துள்ளார்.

மூன்று இலங்கையர்கள் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் நேற்று (02) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்-

இரண்டு பிரதான சந்தேக நபர்கள் கொலைகளை செய்வதற்கு உதவிய சந்தேகத்தின் பேரில் மேலும் மூன்று இலங்கையர்களும், பாகிஸ்தானியரும் பெட்டாலிங் ஜெயாவில் உள்ள வீடொன்றில் வைத்துக் கைது செய்யப்பட்டனர்.

நான்கு சந்தேக நபர்களிடம் விசாரணை நடத்திய போது கிடைத்த தகவலின் அடிப்படையில் இரண்டு முக்கிய சந்தேக நபர்களை கைது செய்ய முடிந்துள்ளது.

உயிரிழந்த இலங்கையர் தவிர மேலும் ஆறு இலங்கையர்களும் பாகிஸ்தானியர் ஒருவரும் கொலையுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின்பேரில்கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் அனைவரும் 20 முதல் 40 வயதுக்கு இடைப்பட்டவர்கள் - என்று தெரிவித்துள்ளார்.

# மனைவியைக் கூரிய ஆயுதத்தால் குத்திக் கொலை செய்த கணவன்!

நபரொருவர் தனது மனைவியை கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

வெல்லவ, மரலுவாவ பிரதேசத்தில் நேற்று (02) காலை இந்த கொலை இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குருநாகல் மரலுவாவ பிரதேசத்தில் வசித்து வந்த 35 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தாயாரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்த பெண் தனது இரண்டு பிள்ளைகளுடன் வீட்டில் வசித்து வந்துள்ள நிலையில், அவரது கணவர் வெளிநாட்டில் இருந்து 2 நாள்களுக்கு முன்னர் வீடு திரும்பியுள்ளார்.

இருவருக்கும் இடையில் ஏற்பட்ட குடும்பத் தகராறு முற்றிய நிலையில் கணவன், மனைவியைக் கத்தியால் குத்திக் கொலை செய்துள்ளார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் குருநாகல் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வெல்லவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சட்ட ஒழுங்குகளைக் கவனத்தில் கொள்ளாத மாவட்டமாகக் காணப்படுகிறது யாழ்ப்பாணம்!

## விசனம் தெரிவிக்கிறார் அரச அதிபர்

நாட்டின் சட்ட ஒழுங்குகள் தொடர்பாக கவனத்தில் கொள்ளாத விசித்திரமான மாவட்டமாக யாழ்ப்பாணம் விளங்குகிறது என்று அங்கலாய்ப்பை யாழ். மாவட்ட அரச அதிபர் அ. சிவபாலசுந்தரன் வெளியிட்டுள்ளார்.

யாழ். மாவட்டத்தில் இடம்பெற்று வரும் சட்ட விரோதச் செயற்பாடுகளை கட்டுப்படுத்துவது தொடர்பான விசேட கலந்துரையாடல் நேற்று (02) யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் கருத்து தெரிவித்த போது மாவட்ட செயலாளர் இவ்வாறு தெரிவித்தார்.

அரச அதிபர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்–

எத்தகைய சவால்கள் ஏற்பட்டாலும் மாவட்டத்தின் சட்ட ஒழுங்குகளை பேணிப் பாதுகாக்கும் வகையில் நிர்வாகச் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் இருக்கிறது.

யாழ். மாவட்டத்தில் நாட்டில் எங்கும் இல்லாத வகையில் சட்டத்துக்கு மாறான



செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு ஒரு பகுதியினர் பழக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக மரக்கறி சந்தைகளில் விவசாயிகளின் உற்பத்தி பொருள்களுக்கு நிறைக் கழிவு முறைமை யாழ். மாவட்டத்தில் மாத்திரமே காணப்படுகின்றது.

அதேபோன்று பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடும் ஓட்டோகளில் கட்டண மீற்றர் பொருத்தியிருக்க வேண்டும் என்பதும் நாடளாவிய ரீதியில் காணப்படும் சட்ட ஏற்பாடு. அதனை ஏற்றுக் கொள்வதற்கு இங்குள்ளவர்கள் பல வேறு காரணங்களைச் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள்.

நாட்டின் சட்ட திட்டங்களை அனைவரும் ஏற்றுக் கொண்டு நடக்கத் தவறும் பட்சத்தில் அவ்வாறானவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வது தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.– என்றார்.

இந்தக் கலந்துரையாடலில் சட்ட விரோத மணல் அகழ்வை கட்டுப்படுத்துவது, மணல் அகழ்வுக்குப் பொருத்தமான இடங்களில் இருந்து மணல் விநியோகத்தை மேற்கொள்வதற்கு காணப்படும் சவால்களைக் கட்டுப்படுத்துவது, சட்ட விரோத கடற்றொழில் செயற்பாடுகளைத் தடுத்தல், போதைப் பொருள் பரவலைக் கட்டுப்படுத்துவது, ஓட்டோகளில் மீற்றர் பொருத்தும் செயற்பாடுகளை விரைவு படுத்துவது உட்பட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

# மாணவியை பஸ்ஸுக்குள் துன்புறுத்திய குடும்பஸ்தர் கைதாகி விளக்கமறியல்

பாடசாலைக்கு சென்ற 17 வயது மாணவியை பாலியல் வன்புணர்வு செய்ய முயற்சித்த குற்றச்சாட்டில் பேரில் கைது செய்யப்பட்ட 24 வயதுடைய சந்தேக நபரை, விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை எதிர்வரும் 10 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மஹர நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஜனித பெரேரா உத்தரவிட்டுள்ளார்.

இவ்வாறு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளவர் காலி பிரதேசத்தில் வசிக்கும் ஒரு பிள்ளையின் தந்தை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 27ஆம் திகதி காலை கிரிபத்கொடவில் இருந்து கராபுகசந்தியா செல்லும் தனியார் பயணிகள் பேருந்தில், மாகொல பகுதியில் உள்ள பாடசாலைக்குச் செல்வதற்காக மாணவி ஏறி ஆசனத்தில் அமர்ந்துள்ளார்.

இந்த நிலையில் பேருந்தில் சிறுமியின் அருகில் அமர்ந்த சந்தேக நபர் சிறுமிக்குப் பாதிப்பு ஏற்படும் வகையிலான தகாத செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளார்.

இதன்போது, பேருந்தின் நடத்துனர் மற்றும் பயணிகள் சந்தேக நபரை பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இந்த நிலையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போது நீதிபதி விளக்கமறியல் உத்தரவை பிறப்பித்துள்ளார்.

# வைத்தியர்கள் பற்றாக்குறையால் நெருக்கடியில் வட்டவளை ஆஸ்பத்திரி

(மஸ்கெலியா நிருபர்)

வட்டவளை மாவட்ட வைத்திய சாலை யில் தற்போது ஏற்பட்டுள்ள வைத்தியர்களின் பற்றாக்குறை யால் காலை 8 மணிமுதல் மாலை 4 மணிவரை மாத்திரமே வைத்திய சாலை இயங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வட்டவளை மாவட்ட வைத்திய சாலையில் உயர் அதிகாரிகளின் அறிவுறுத்த லுக்கு அமைவாகவே இவ்வாறான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்ற அறிவித்தல் விடுக்கப்பட் டுள்ளது.

வட்டவளை மாவட்ட வைத்திய சாலையின் முன்றலில் இந்த அறிவித் தல் காட்சிப்படுத்தப் பட்டுள்ளது.

வைத்தியாசலையில் ஒரேயொரு வைத்தியர் மாத்திரம் இருக்கின்றார். இதனால் தொடர்ச்சியாக வைத்தியாச லையில் இயக்க முடியாத நிலை ஏற்பட் டுள்ளது என்று அந்த அறிவித்தலில் குறிப் பிடப்பட்டுள்ளது.

இது குறித்து சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் கவனம் செலுத்தி இந்த வைத்தியசாலை கடந்த காலத்தைப் போன்று 24 மணி நேரமும் இயங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# ஒலுவில் கடலில் குளிக்கச் சென்ற மாணவனைக் காணவில்லை!

(எம். எப். நவாஸ் )



அட்டாளைச் சேனை 13 ஆம் பிரிவைச் சேர்ந்த ஐயூப் ரீப் அகமத் எனும் பத்தாம் தரத்தில் கல்வி பயிலும் மாணவன் கடலுக்குக் குளிக்கச் சென்ற நிலையில் காணாமல் போயுள்ளார்.

நேற்று மாலை (2) ஒலுவில் துறைமுகத்தை அண்மித்த கடலில் குளிப்பதற்காக சென்ற போது காணாமல் போயுள்ளார்.

இது விடயமாக அக்கரைப்பற்று பொலீஸ் நிலையம் மற்றும் கடற்படை பிரிவினருக்கு தெரிவித்ததை அடுத்து கடற்படையினரும் மீனவர்களும் தீவிரமாக தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர்.



# கல்முனை வலய சிறுவர் தின நிகழ்வு

(அ.அஸ்வர், நூருல் ஹுதா உமர்)

கல்முனை வலயக் கல்வி அலுவலகம் ஏற்பாடு செய்த சிறுவர் தின நிகழ்வு பிரதிக்கல்விப் பணிப்பாளர் எம்.எச்.றியாஸா தலைமையில் இன்று நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹ்துல் நஜீம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இதில் கல்முனை கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரியா ஆலோசகர்கள், வளவாளர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள் உட்பட பலரும் பங்கேற்றனர்.

நிகழ்வின் விஷேட அம்சமாக 'சிறுவர் எதிர்காலம்' எனும் கருப் பொருளில் காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரி மாணவர்களின் வீதி நாடகமொன்றும் இடம் பெற்றது.



ஊர்வலம், விளையாட்டு நிகழ்வுகள், கலை நிகழ்வுகள் உட்பட பலவும் அரங்கேறின. இதன்போது மாணவர்களுக்கு நினைவு பரிசில்களும் வழங்கப்பட்டன.

# இராணுவத்தின் ஏற்பாட்டில் சிறுவர் தினம்

(பாறுக் ஷிஹான்)

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு இலங்கை இராணுவத்தின் ஏற்பாட்டில் நாடு முழுவதும் நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

அம்பாறை மாவட்டம் இலங்கை இராணுவத்தின் 241 ஆவது காலாட்படை பிரிவின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் விபுல சந்திரசிறியின் ஆலோசனைக்கமைய 241 இராணுவ பிரிவின் கட்டளை அதிகாரி கேணல் தனிக பதிரட்ன வழிகாட்டலில் அம்பாறை கல்முனை 18 ஆவது விஜயபாகு காலாட் படைப்பிரிவின் ஏற்பாட்டில் கல்முனை சிங்கள மகா வித்தியாலயத்தில் சிறுவர் தின கொண்டாட்ட நிகழ்வு இன்று இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக 241 இராணுவ பிரிவின் கட்டளை அதிகாரி கேணல் தனிக பதிரட்ன கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினராக அம்பாறை கல்முனை 18 ஆவது விஜயபாகு காலாட் படைப்பிரிவின் கட்டளை அதிகாரி மேஜர் களுஆராச்சி உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.







# திருகோணமலையில் சட்டத்தரணிகள் கவனவீர்ப்பு!

(ஹஸ்பர்)

முல்லைத் தீவு மாவட்ட நீதிபதி அச்சுறுத்தல் காரணமாக நாட்டை விட்டு வெளியேறினார். இது தொடர்பில் நீதித் துறை சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும் என்று தெரிவித்து திருகோண மலை மாவட்ட சட்டத்தரணிகள் இன்று (03) திருகோணமலை மாவட்ட நீதிமன் றத்துக்கு முன்பாகக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

திருகோணமலை மாவட்ட சட்டத்தர ணிகள் சங்கம் ஏற்பாடு செய்திருந்தனர்.

நீதி தூறையை சுயமாக இயங்கவிடு, சட்ட ஆட்சியை நிலை நிறுத்து உள்ளிட்ட வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறும் கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

நாட்டில் நீதி சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும் நீதிபதி அச்சுறுத்தலுக்கு உள்ளாகுவதால் நீதியை நிலை நாட்ட முடியாமல் போகும் எனவும் கவனவீர்ப் பில் ஈடுபட்ட சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.



# தோட்டத் தொழிலாளர்கள் குளவிகளால் அண்மைக் காலமாகப் பெரும் பாதிப்பு!

(மஸ்கெலியா நிருபர்)

மத்திய மலையகத்தில் உள்ள தனியார் மற்றும் அரச பெருந்தோட்ட நிறுவனங்களின் மூலம் நடத்தப்படும் தேயிலைத் தோட்டங்களில் பணிபுரியும் தோட்டத் தொழிலாளர்கள் அண்மைக் காலமாகக் குளவிகளின் தாக்கங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

தேயிலைத் தோட்டங்களில் உள்ள பெரிய மரங்கள் மற்றும் தேயிலை புதர்கள், தேயிலை செடிகளின் கீழ் பகுதியில் கட்டப்பட்டுள்ள குளவிக் கூடுகள் கலையும் போது அவை தொழிலாளர்களைத் தாக்குகின்றன.

காகம், கடும் காற்று, குரங்கு மற்றும் கழுகுகளால் குளவிக் கூடுகள் கலையும் நிலைமை ஏற்பட்டுள்ளது. மழை மற்றும் காற்றின் போது குளவி கூடுகள் சரிந்து விழுவதால் குளவிகள் கிளர்ந்தெழு கின்றன.

மத்திய மலைநாட்டின் மஸ்கெலியா, நல்லதண்ணியா, காட்மோர், நோர்வூட், நோர்டன்பிரிட்ஜ், ஹட்டன், டிக்கோயா, பொகவந்தலாவ, தலவாக்கலை, நானு



ஓயா, பூண்டலோயா, டயகம, அக்கரபத் தனை, மன்னராட்சி, ஆகிய பகுதிகளில் உள்ள தேயிலைத் தோட்டங்களைச் சுற்றி குளவித் தாக்குதல்கள் தொடர்ச் சியாக இடம்பெற்றுவருகின்றன.

இந்நிலையில், காயம் அடையும் தோட்டத் தொழிலாளர்கள் போக்குவரத்து மற்றும் ஏனைய சிரமங்களுக்கு மத்தியில் ஆம்புலன்ஸ் சேவை மற்றும் தோட்ட வாகனங்கள் மூலம் அருகிலுள்ள மருத்துவமனைகளுக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

கடந்த காலங்களில் குளவி கொட் டுக்கு இலக்காகிப் பல தொழிலாளர்கள் உயிரிழந்துள்ளனர். இவ்வாறான பல சம்பவங்கள் மத்திய மற்றும் ஊவா ஏனைய மாகாணங

தேயிலைத் தோட்டங்களில் குளவி களை அகற்றி நிரந்தரத் தீர்வு வழங்க வேண்டும் என்று பெருந்தோட்ட தொழிலாளர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.



# நிலாவரை...

நிலாவரைக் கிணற்றின் அமைவிடம் பற்றி நோக்கும்போது யாழ்ப்பாண நகருக்கு வடக்கு திசையில் 16 கிலோ மீற்றர் தொலைவில் அச்சுவேலி நோக்கி செல்லும் இராசவீதி – புத்தூர் – பருத்தித்துறை நெடுஞ்சாலை சந்தியில் வலிகிழக்குப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்டது. ஜே-275 கிராம சபை பிரிவுக்குள் உள்ள நவக்கிரி எனும் ஊரில் நிலாவரை கிணறு அமைந்துள்ளது.

பண்டைய காலத்தில் கிணற்றின் ஆழம் யாருக்கும் தெரியாததால் அதன் ஆழம் வானில் உள்ள நிலாவரைக்கும் என சொல்லப்பட்டதால் இதன் பெயர் நிலாவரை எனப்பட்டது. இவ் நிலாவரை கிணற்றை இராமாயண கதையோடு தொடர்புபடுத்தி கூறப்படுகிறது. இதனால் சுற்றுலா ரீதியிலும் முக்கியம் பெறுகின்றது. அதாவது இராமன் சீதையை மீட்பதற்காக இராவணனுடன் போர் புரிவதற்கு வானர படைகளுடன் இலங்கை வந்தபோது வானரப் படைகளின் நீர் தேவையை பூர்த்தி செய்வதற்காக அம்பை ஊன்றி நீர் எடுத்த இடம் இது என்று கர்ண பரம்பரை கதை கூறுகின்றது.

இந்த நிலாவரைக் கிணற்றின் முக்கியத்துவம் 2010 ஆம் ஆண்டுக்குப் பின்னர்தான் விவசாயத்துக்கு அப்பால் கலாச்சார சுற்றுலாவில் மிக முக்கியம் பெற்றது. இந்த நிலாவரை கிணறு தன்னுள் பல மர்மங்களையும் வியப்புக்களையும் கொண்டதாக காணப்படுகின்றது. அவற்றை கண்டறியும் வகையில் பல நூற்றாண்டு காலமாக உலகில் உள்ள பல நாடுகளில் இருந்து வந்து ஆராய்ச்சியாளர்கள் பல ஆய்வுகளை மேற்கொண்டு இருந்தார்கள் .அதாவது பிரித்தானியா, ஜேர்மனி போன்ற நாடுகளில் இருந்து பல ஆராய்ச்சியா ளர்கள் ஆய்வுகளை மேற்கொண்டனர். ஆயினும் ஆழம் பற்றிய முடிவுகளை அவர்களால் தர முடியவில்லை. அத்துடன் தொல்லியல் திணைக்களத்தின் அனுமதி பெறாமையால் அதன் முடிவுகள் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

நிலாவரையின் ஆரம்பகால ஆய்வுகள் பெரும்பாலும் ஆழத்தை கண்டறிவதாகவே காணப்பட்டது . அந்த வகையில் 1824 ஆம் ஆண்டு பங்குனி மாதம் ஃவோடிபில் ஒக்லாண்ட் ஃகைகின்னின் அனுசரணையுடன் நிலவரையின் ஆழம், நீர் மற்றும் வேகம் என்பன பற்றி ஆராயப்பட்டது. இந்த ஆய்வின் பயனாக இதன் ஆழம் அப்போதைய தொழில்நுட்பத்துக்கு ஏற்றால் போல் கண்டுபிடிக்கப்பட்டது. அப்போது இதன் ஆழம் 164 அடியாகவும் கடல் மட்டத்திலிருந்து 0.25 அடி ஆழத்தில் நீரைக் கொண்டுள்ளது. தற்போதுள்ள நிலாவரை கிணறு 52 அடி நீளம் 31 அடி அகலம் கொண்டதாக நீள் சதுர வடிவில் அமைந்துள்ளது. மற்றும் இந்தக் கிணறு ஆழ்துளை கிணறு என அப்பகுதி மக்கள் அடையாளப்படுத்துகின்றனர். இருப்பினும் கிணற்றின் ஆழம் 1895 ஆம் ஆண்டில் எச்.எவ். டாம்லின் என்பவரால் சில பம்பிங் மற்றும் பிளம்பிங் செயல்பாடுகளை மேற்கொள்வதன் மூலம் கண்டறியப்பட்டது . அவர் இந்த கிணற்றின் ஆழத்தை வடக்கு பக்கத்தில் 145 அடி தெற்கு பக்கத்தில் 120 அடி மற்றும் மேற்கு பக்கத்தில் 121 அடி என்று கணக்கிட்டார்.

1917 ஆம் ஆண்டு யாழ்ப்பாண மாவட்ட நீதிபதியாக இருந்த போல்பிரிஸ் தனது குறிப்புகளில் கிணற்றுக்கு மேலாக அப் பகுதியில் பௌத்த இடிபாடுகள் இருந்ததாக குறிப்பிடுகிறார். இதற்கு இன்னொரு சான்றாக இலங்கையில் டச்சு காலத்தில் இருந்த டச்சு மந்திரி ரெவ் பிலிப்பஸ் போல் டேயஸ் தனது பயண குறிப்புகளில் குறிப்பிட்டுள்ளார். அவர் குறிப்பிடும் புத்தகோயில் புத்தகமுவ என்ற இடத்தில் இருந்ததாக குறிப்பிடுகிறார். புத்தகமுவவில் உள்ள இக்கோயில் விஜயபாகு என்பவனால் புதுப்பிக்கப்பட்டதாக கூறப்படுகின்றது.

1952 ஆம் ஆண்டு டிசம்பர் 9ஆம் திகதி மேற்கொண்ட ஆய்வு காணப்படுகிறது. நிலாவரை கிணற்றின் மேற்கே 250 கிலோ மீற்றர் தொலைவில் விவசாயி ஒருவரால் உடைந்த புத்தர் சிலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மேலிருந்து இடுப்பு வரை உள்ள பகுதி மட்டுமே கிடைக்கப்பெற்றுள்ளது. மீதமுள்ள பகுதி 3 அடி 3.5 அங்குல உயரமும் தலைப்பகுதி 1 அடி 2 அங்குல நீளம் கொண்டது. மூக்கு பகுதி சேதம் அடைந்துள்ளது. சுமார் 2 தொடக்கம் 4 அடி ஆழத்தில் புதைந்துள்ள மற்ற பகுதிகள் மற்றும் சில பானை ஓடுகளும் காணப்பட்டன. இவை யாழ்ப்பாண தொல்பொருள் அருங்காட்சியகத்துக்கு மாற்றப்பட்டன.

கி. பி. பத்தாம் நூற்றாண்டை சேர்ந்ததாக கருதப்படும் எச்சங்களும் கண்டறியப்பட்டன.

1965 இல் நிறுவன வடிகால் அமைப்பு சபையினர் நிலுவையி கிணற்றில் மேற்கொண்டு ஆய்வின்படி 10 மணித்தியாலங்களில் 30 ஆயிரம் தொடக்கம் 40 ஆயிரம் கலன் நீர் இறைக்கப்பட்டு மேலும் நீர் இறைக்கப்படின் உப்பு நீர் மேலோங்கி வருவது அவதானிக்கப்பட்டு அம் முயற்சி நிறுத்தப்பட்டது. இதன் மூலம் யாழ்ப்பாண குடா நாட்டின் தரைக்கீழ் நீர்வளம் உப்பு நீரின் மேல் மிதப்பதை ஆய்வுகள் உறுதி செய்துள்ளன.

எனவே நல்ல நீர் கிடைக்கும் கிணற்றிலிருந்து அதிகளவு நீரை வெளியேற்றும் போது நீர் உவர் தன்மை அடைகின்றது. இன்று குடா நாட்டின் பல இடங்களில் இந்நிலைமை உருவாகிவருகிறது மற்றும் மழைக்காலத்தில் குடாநாட்டில் தரைக்குள் நீரின் பெரும் பகுதி வீணாக கடலை சென்றடையும் நிலை பல இடங்களில் அடையாளப் படுத்தப்பட்டுள்ளது. எனவே நன்னீர் வளம் எவ்விதம் உவர் நிலை அடைகிறது என்பதை அடையாளப்படுத்தும் வகையில் இவ்வாய்வு முக்கியம் பெறுகிறது.

1969 இல் இலங்கை நீர்ப்பாசன பொறியியலாளர் எஸ். ஆறுமுகம் இந்தக் கிணற்றின் ஆழம் 164 அடி ஆறு அங்குலம் என குறிப்பிட்டார். மற்றும் 2013 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி மத்திய கலாச்சார நிதியம் கடல் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் குழுவுடன் நிலாவரை கிணற்றின் அடிப்பகுதியை கண்டறிய ஒரு பயணத்தை மேற்கொண்டார். இந்தப் பயணத்தின் போது அவர்கள் கிணற்றின் அடிப் பகுதியை வெற்றிகரமாக கண்டுபிடித்துக் கிணற்றின் அதிக பட்சம் ஆழம் 50 மீற்றர் என அறியப்பட்டது.

ஆரம்பத்தில் நிலாவரையில் மேற்கொண்ட ஆய்வுகள் பொதுவாக ஆழம் பற்றி அறியப்பட்டதாக காணப்படுகிறது. இங்கு மேற்கொண்ட ஆய்வில் முக்கியமானது 2016 ஆம் ஆண்டு ஏப்ரல் 23ஆம் திகதி குடாநாட்டில் வெப்பநிலை 36 பாகை செல்சியசைக் காட்டியது. ஆனால் குடா நாட்டில் மிகவும் ஆழமான பகுதியில் நீருக்கு அடியில் அதன் வெப்பநிலை 26 பாகை செல்சியஸ் என பதிவாகியது அன்றுதான் பல உண்மைகள் வெளிக்கொண்டு வருகின்றன இதனால் இந்த ஆய்வு முக்கியம் பெறுகின்றது.

இலங்கை கடற்படையின் துளி ஓடிகள் ரோபோக்களின் உதவியுடன் நிலாவரை கிணற்றின் ஆழத்தை அறியும் வண்ணம் சகல நவீன பாதுகாப்பு

(12ஆம் பக்கம் பார்க்க)

# நிலாவரை...

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடைமுறைகளையும் பின்பற்றியவாறு கிணற்றுக்குள் இறங்கினார்கள். கிணற்றுக்குள் 55 மீற்றர் சென்ற போது கீழ்மட்டம் தென்பட்டது இரண்டு பனை அல்லது தென்னை மரங்களின் உயரம் கொண்டதாக இந்தக் கிணற்றின் ஆழம் காணப்படுகின்றது.

மற்றும் அக்கிணற்றின் அடிப்பாகத்தில் மூன்று மாட்டு வண்டிகள் காணப்பட்டதும் சுழியோடிகள் கொண்டு சென்ற ரோபோக்கள் எடுத்த படங்களின் மூலம் தெரிய வந்துள்ளது. இந்த நீரடி அகழ்வாய்வில் ரோபோக்கள் என்ற உயர் தொழில்நுட்பம் பயன்படுத்திய வகையில் முக்கியம் பெறுகின்றது. இங்கு கண்டுபிடித்த மாட்டு வண்டில்களில் ஒரு வண்டில் முற்றாகச் சிதைவடைந்த நிலையிலும் மற்றையவை மாட்டு வண்டிகள் என உருவத்தை அடையாளம் காணக்கூடியவாறும் காணப்படுகின்றன. மாட்டு வண்டிகளுக்கு கிணற்றுக்குள் எவ்வாறு வந்தன என்பது தொடர்பில் எதுவித தகவலும் கிடையாது. வண்டில்களின் நிலையை வைத்துப் பார்க்கும்போது இந்தச் சம்பவம் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் இடம் பெற்றிருக்கலாம் என அனுமானிக்க முடிகிறது. மாட்டு வண்டிகள் கிடைக்கப் பெற்றதன் மூலம் போக்குவரத்துக்குப் பொருள்களை ஏற்றிச் செல்லப் பயன்படுத்தப்பட்டு இருக்கலாம் எனவும் மற்றும் மக்களின் தொழில்நுட்பம் கலை உணர்வு அறிவியல் போன்ற இன்னொரன்ன தகவல்களை தருவதால் இங்கு மேற்கொண்ட நீரடி அகழ்வாய்வு முக்கியம் பெறுகிறது.

மற்றும் இவ் ஆய்வில் இன்னொரு உண்மையை நிரூபிக்கப்பட்டது. நிலாவரை கிணற்று முழு எலுமிச்சம் பழத்தை போட்டால் அதை சில மணி நேரத்தின் பின்னர் கீரிமலை தீர்த்த கேணியில் காணலாம் என கூறுவது வழக்கம். அதற்கான சாத்தியப்பாடுகள் இருப்பதை ரோபோக்களின் ஆய்வுகளின் நிறுவுகின்றன. ஏனெனில் கிணற்றில் இருந்து பல திசை நோக்கி செல்லும் சுரங்கப் பாதைகளின் ஊடாக நீரோட்டங்கள் காணப்படுகின்றன.

கீரிமலைக்கேணியின் தென்கீழ் மூளையில் குகை ஒன்று காணப்படுகின்றது. அதனூடாகவே கேணிக்கு நல்ல தண்ணீர் வருகின்றது. இந்தக் குகைக்கும் நிலாவரை கிணற்றில் ரோபோக்கள் உறுதிப்படுத்திய குகைக்கு இடையிலான நீரோட்ட தொடர்பும் இருப்பது அறிந்து கொள்ள முடிகின்றது. நிலாவரை கிணற்றுக்குள் நேரடியான நிலத்தடி நீர் தொடர்பும் இருப்பதால் வறட்சியின் போது மழைக்காலத்தின் போதும் நீரோட்டம் குறைவது கூடுவதோ கிடையாது.

இலங்கையின் வடபகுதியின் குறிப்பாக யாழ்ப்பாண குடா நாட்டின் தரைத்தோற்ற அமைப்பை நிலத்தடியில் காணப்படும் குறைகளுக்கான காரண மாகும்.

ஆவாய்வின்போது ஆழம் கண்டறியப்பட்டுள்ளதுடன் இங்குள்ள நீர் 31 அடிவரை நன்னீராக உள்ளது. அதன் கீழ் 81 அடிவரையும் உவர் தன்மையாக உள்ளது என்பது கண்டறியப்பட்டது .

கிணற்றில் மேற்கொண்டு ஆய்வின் படி 10 மணித்தியாலங்களில் 30,000-40,000 கலன் நீரோட்ட பாசனத்துக்காக கிணற்றில் இருந்து எடுக்கக் கூடிய தன்மை வெளியிடப்பட்டது. இவ்விதம் 2016 ஆம் ஆண்டில் இக்கிணற்றில் ஆழம் அறியப்பட்டதுடன் நிலத்தடி நீரோட்டம் நிரூபிக்கப்பட்டது.

மூன்று மாட்டு வண்டிகளும் மக்களது வாழ்வாதாரத்தை எடுத்துக்காட்டுவதுடன் மற்றும் இலங்கையில் ரோபோ தொழில்நுட்பத்தை பயன்படுத்தி முதன் முதலில் ஆய்வு செய்தமையால் இவ் நீரடி அகழ்வாய்வின் முக்கிய பெற காரணமாகும். இவ்வாய்வின் மூலம் பல உண்மைகள் கட்டவிழ்க்கப்பட்டன. இதனால் நிலாவரையில் மேற்கொண்ட ஆய்வு முக்கியம் பெறுகிறது.

**தங்கராசா விதுஷன்,**
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.



# பொன்விழா அகவை நிகழ்வு!

**( வி.ரி. சகாதேவராஜா)**

காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரியில் பயின்று 50 ஆவது அகவையை எட்டிய 1973 பிறந்த அணியினர் பொன்விழா நிகழ்வைக் கொண்டாடினர்.

பொன்விழா அணியின் தலைவர் நாகலிங்கம் சசிதரன் தலைமையில் இப் பொன்விழா நிகழ்வு காரைதீவு விபுலானந்த கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

முன்னதாக, இவ்வணியினருக்கு 1989 இல் சாதாரண தரத்திலும் 1992 இல் உயர்தரத்திலும் கற்பித்த ஆசிரியர்கள் 20 பேர் மாலை சூட்டி வரவேற்கப்பட்டார்கள்.

பின்னர் மேடையில் வரவேற்புரையை செயலாளர் சீ.திருக்குமார் நிகழ்த்த உபசெயலாளர் கண.தங்கநேசன் விளக்க உரையாற்றினார்.

தொடர்ந்து ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த அணியின் உறுப்பினர்கள் தமது குடும்ப சகிதம் வந்து பொன்னாடை போர்த்தி பாத நமஸ்காரம் செய்து பரிசு வழங்கி கற்பித்த ஆசிரியர்களைக் கௌரவித்தனர்.

அதேபோன்று 48 குடும்பங்களுக்கும் சாதனை படைத்த மாணவர்களுக்கும் அதே ஆசிரியர்கள் பரிசுகள் வழங்கி கௌரவித்தார்கள்.

சிறப்புரையை ஆசிரியர்கள் சார்பில் உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா நிகழ்த்தினார் .

அங்கு பட்டிமன்றம் கவிதை பாடல் போன்ற நிகழ்ச்சிகள் மேடை ஏறின.

பொன்விழா அணியைச் சேர்ந்த டாக்டர் இ. உதயகுமார் கவிதை வழங்க, பிரதேச செயலாளர் உதயசிறிதர் பாடல்களை பாடினார். உறுப்பினர் திருமதி யமுனா இளஞ்செழியன் நன்றியுரையாற்றினார்.





# குறைகள் சொல்லும் கலாச்சாரத்திலிருந்து எமது சமுதாயம் மாற்றம் பெறுதல் வேண்டும்

## சிறுவர் தின நிகழ்வில் முசாரப் எம்.பி. கருத்து

**(கே. எ. ஹமீட், எம் எப். நவாஸ்)**

குறைகள் சொல்லும் சலாசாரத்தில் இருந்து எமது சமுதாயம் மாற்றம் பெற வேண்டியது அவசியம்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் முசாரப் தெரிவித்துள்ளார்.

சர்வதேச சிறுவர் தின நிகழ்வுகள் இன்று பொத்துவில் அல் – முனவ்வறா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

வித்தியாலய அதிபர் எம்.ஐ.சபூர்டீன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முசாரப் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றினார்.

கௌரவ விருந்தினர்களாக பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் எம்.எஸ். முபாரக், முன்னாள் தவிசாளர் எம். எ.ச்.அப்துல் றஹீம், பொத்துவில் ஜம்இய்யத்துல் உலமா சபையின் தலைவர் ஏ.முகைதீன் பாவா மௌலவி, பிரதிக் கல்விப்பணிப்பாளர் என்.அப்துல் வஹாப், டாக்டர் உவைஸ் பாறூக், நாடாளுமன்ற உறுப்பினரின் ஒலுவில் பிரதேச இணைப்பாளர் எம்.ஜே. எம்.அஸ்ஹர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

இங்கு மாணவச் சிறுவர்களின் பாடல், நடனம், பேச்சு என பல நிகழ்வுகள் இடம்பெற்றன.

நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். எம்.முசாரப் மாணவர்களுக்குப் புத்தகப் பைகளும் வழங்கினார்.

பொத்துவில் பிரதேசத்துக்கும் அம்பாறை மாவட்டத்துக்கும் பல்வேறு அபிவிருத்திப் பணிகளை குறிப்பாக கல்வித்துறைக்கு ஆற்றிவருவதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முசாரப் பாடசாலை சமூகத்தால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

இங்கு அவர் தொடர்ந்து உரையாற்றும் போது–

பொத்துவில் பிரதேசத்தினதும், மாவட்டத்தினதும் அபிவிருத்திக்காகவும், காணி மீட்புக்காகவும் தொடரான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றேன். அந்த வகையில்தான் மண் மலை காணி விவகாரத்தில் வெற்றி பெற்று அந்தப் பகுதியில் உள்ள மக்கள் சுதந்திரமாக வாழ்வதற்கு வழி செய்துள்ளோம்.

இதனை முடியாத காரியம் என்று முஸ்லிம் தலைமைகள் ஒதுங்கியிருந்த நிலையில் உங்களின் வாக்குகளைப் பெற்ற உங்களது நாடாளுமன்ற உறுப்பினர் முசாரப்செய்து முடித்திருக்கின்றார்.

இதனைப்போல் இன்னும் பல விவசாயக் காணிகள், குடியிருப்புக் காணிகள் இன்னும் சில மாதங்களில் விடுவிக்கப்பட்டு – மக்களுக்குக் கிடைக்கவுள்ளது.

அரசியல் காரணங்களுக்காக விமர்சிப்பவர்கள் பொய்களையும், புரட்டுக்களையும் சொல்லிக்கொண்டே இருப்பார்கள். அதனை நாம் கருத்தில் கொள்வதில்லை. மக்களுக்கான தீர்வைப் பெற்றுக் கொடுப்பது எமது இலக்காகும்.

பொத்துவில் பிரதேசத்தில் உள்ள பல பிரச்சினைகளுக்கும் தீர்வைப் பெற்றுக் கொடுத்துக் கொண்டிருக்கும் இச்சந்தர்ப்பத்தில் குறைகளை தொடர்ந்தும் சொல்லிக் கொண்டிருக்காமல் நிறைகளைப் பேசும் மக்களாக நாம் மாறவேண்டும்.

வெளிப்பிரதேசங்களில் இருந்து வந்து நமது மண்ணில் படிப்பிக்கும் ஆசிரியர்களை மிகக் கௌரவமாக மதிக்க வேண்டும். அவர்கள் பல சிரமங்களை எதிர்கொண்டுதான் நமது மாணவர்களுக்கு கல்வியைப் போதிக்கின்றார்கள்.

கடந்த காலங்களைவிட இப்போது ஆசிரியர் பற்றாக்குறையை பெருமளவில் குறைத்திருக்கின்றோம். தொடர்ந்தும் அதற்கான ஏற்பாடுகளை செய்து வருகின்றோம்.

இதேபோன்றுதான் பொத்துவிலுக்கான வலயக்கல்வி அலுவலகத்தையும் கொண்டு வருவோம். அதற்கான அத்தனை முயற்சிகளையும் செய்து வருகின்றேன்.– என்றார்.

# 14 லட்ச ரூபா பெறுமதியான பாடசாலை உபகரணம் வழங்கல்

**(மஸ்கெலியா நிருபர்)**

இலங்கை காகிதாதிகள் சங்கத்தின் அனுசரணையுடன் டிக்கோயா தமிழ் மகா வித்தியாலத்துக்கு 14 லட்சம் ரூபா பெறுமதியான பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கல்லூரியின் பதில் அதிபர் சங்கர மணிவண்ணனின் தலைமையில் சிறுவர் தின நிகழ்வுகள் இடம்பெற்றன. இதன்போது இந்த உபகரணங்கள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.

அப்பியாச புத்தகங்கள், மற்றும் பாடசாலை உபகரணங்கள் என்பன இலங்கை காகிதாதிகள் சங்கத்தால் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.



இந் நிகழ்வில் இலங்கை காகிதாதிகள் சங்கத்தின் தலைவர் நந்தகுமார், செயலாளர் தில்லைநாதன் மற்றும் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் பிரதி பரீட்சைகள் ஆணையாளர் விஷ்வநாதன், ஹட்டன் கோட்டாக் கல்வி பணிப்பாளர் திருமதி.லக்ஷ்மி பிரபா, கல்லூரியின் முன்னால் அதிபர் மூவேந்தன், பழைய மாணவர் சங்க பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# சாய்ந்தமருதில் கடலரிப்பை தடுக்கும் வேலைத் திட்டம்!

## ஹரீஸ், அதாஉல்லா கலந்து கொண்டு இன்று ஆரம்பித்து வைத்தனர்

**(நூருல் ஹுதா உமர், யூ.கே. காலித்தீன் )**

பெரும் கடலரிப்பை சந்தித்துள்ள சாய்ந்தமருது பிரதேச கடலரிப்பை கட்டுப்படுத்தும் நோக்கில் வேலைத் திட்டம் இன்று (03) ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் சாய்ந்தமருது கடலரிப்பு தடுப்பு நடவடிக்கைக்கான ஆரம்ப கட்ட வேலைகள் இன்று தொடங்கப்பட்டன.

சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம். எம். ஆசிக் தலைமையில் கரையோரம் பேணல் திணைக்கள மாகாண பொறியியலாளர் எம். துளசி தாசன் முன்னிலையில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஏ.எல்.எம். அதாவுல்லா, சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் ஆகியோர் கலந்து கொண்டு வேலைத்திட்டத்தை ஆரம்பித்து வைத்தனர்.

55 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்ட இந்த வேலைத் திட்டத்தின் வேலைகளை தொடங்கி வைத்த இந்நிகழ்வில் சாய்ந்தமருது முன்னாள் பிரதேச செயலாளர் ஏ. எல். எம். சலீம், சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஜே. கே. எம். அர்சத் காரியப்பர், சாய்ந்தமருது பிரதேச செயலக நிர்வாக கிராம நிலதாரி ஏ.எம்.ஏ. நளீர், கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர் ஏ. நிஷார்தீன், சாய்ந்தமருது பிரதேச செயலக கரையோரம் பேணல் திணைக்கள அதிகாரிகள், சாய்ந்தமருது பிரதேச முக்கியஸ்தர்கள், மீனவ சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



# கைதடியில் சிறுவர் தின நிகழ்வு

**(த.சுபேசன்)**

அனைத்துல சிறுவர் நாள் நிகழ்வுகள் கைதடி சிறுவர் பூங்காவில் சிறுவர்களின் தன்னெழுச்சியான நிகழ்வாக (01) ஞாயிற்றுக்கிழமை ஆசிரியர் க.கஜீபன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது சிறுவர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளுக்குரிய பரிசில்கள் வழங்கப்பட்டதுடன் கலைநிகழ்வுகளும் சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்வில் ஆசிரியர்களான தயாபரி சூரியகுமாரன், சுபத்திராதேவி தனபாலசிங்கம், கைதடி பொது நூலகத்தின் நூலகர் மற்றும் நிகழ்வுக்கு அனுசரணை வழங்கியவர்கள் கலந்துகொண்டு பரிசில்களை வழங்கினர்.



# பா.ஜ.க. கூட்டணியில் இருந்து விலகியது அனைத்து அ.தி.மு.க தொண்டர்களின் முடிவு!

## - பொதுச் செயலாளர் பழனிசாமி திட்டவட்டம்



பா.ஜ.க. கூட்டணியில் இருந்து அ.தி.மு.க. விலகியமை ஒட்டுமொத்த தொண்டர்களின் முடிவு என்று அ.தி.மு.க. பொதுச் செயலாளர் பழனிசாமி தெரிவித்துள்ளார்.

சேலத்தில் நேற்று நடைபெற்ற சூரமங்கலம் பகுதி அ.தி.மு.க. பூத் கமிட்டி நிர்வாகிகள், உறுப்பினர்கள் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழகத்தில் 10 ஆண்டுகளுக்கு முன் தி.மு.க. ஆட்சியை விட்டுச் சென்றபோது, 2.23 லட்சம் கோடி ரூபா கடன் இருந்தது. அதற்கு வட்டியாக 1 லட்சம் கோடி ரூபா செலுத்தினோம்.

ஆனால், கொரோனா, ஜி.எஸ்.டி. பாதிப்புகளுக்கு இடையில் அ.தி.மு.க. ஆட்சியில் விட்டுச் சென்றது 81 ஆயிரம் கோடி ரூபா கடன் மட்டும்தான். திமுக ஆட்சியில் எல்லாவற்றிலும் ஊழல் நிலவுகிறது. இதனால்தான், இந்த ஆட்சி எப்போது அகற்றப்படும் என்று அனைவரும் எதிர்பார்த்துள்ளனர்.

அ.தி.மு.கவின் 2 கோடி தொண்டர்களின் உணர்வுகள் குறித்து, நிர்வாகிகள், மாவட்டச் செயலாளர்கள், எம்.பி., எம்.எல்.ஏ-க்களுடன் ஆலோசனை நடத்தப்பட்டது. அதில், பா.ஜ.க. மற்றும் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இருந்து விலகுவதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இது கட்சியின் பொதுச் செயலாளர் எடுத்த முடிவு அல்ல. ஒட்டுமொத்த தொண்டர்கள் எடுத்த முடிவு. கூட்டணி முடிவு குறித்து பொதுச் செயலாளர் கருத்து சொல்லவில்லை என்று ஊடகங்கள் பேசுகின்றன. நிர்வாகிகள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்தான், இறுதி முடிவு. அனைவரின் சம்மதத்துடன் மட்டுமே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

தேசிய அளவில் கூட்டணி அமைத்துப் போட்டியிட்டதால், எமக்கு உடன்பாடில்லாத பிரச்சினைகளிலும், அதை நிறைவேற்றும் நிலைக்குத் தள்ளப்பட்டோம்.

மக்களவைத் தேர்தலில் பிரதமர் யார் என்று கேட்கிறார்கள். ஒடிசா, மேற்கு வங்கம், ஆந்திரா, தெலங்கானா மாநிலங்களில் பிரதமரை முன்னிறுத்தியா தேர்தலை சந்தித்தனர்? தமிழக நலன் தான் நமக்கு முக்கியம். மாநில நலனை முன்னிறுத்தியே தேர்தலை சந்திப்போம்.

தமிழகத்தின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டுமென்பதே எங்கள் பிரதான நோக்கம். அதிமுக எப்போதும் சிறுபான்மையினரைப் பாதுகாக்கும். அதிமுக தேசியக் கட்சி அல்ல, மாநிலக் கட்சி. எனவே, தமிழகத்தைப் பாதிக்கக் கூடிய திட்டங்களை நிச்சயம் எதிர்ப்போம்.

எதிர்வரும் மக்களவைத் தேர்தலில் அதிமுக தலைமையில் பிரம்மாண்டமான கூட்டணி அமைத்து, 40 இடங்களிலும் வெற்றி பெறுவோம் என்று தெரிவித்துள்ளார்.

# ஆந்திரா, தெலுங்கானாவில் 60 இடங்களில் தேசிய புலனாய்வு முகமை தீவிர சோதனை

ஆந்திரா, தெலுங்கானாவில் நக்ஸலைட்களின் உறவினர்கள், வழக்கறிஞர்களின் வீடு, அலுவலகங்கள் உட்பட சுமார் 60 இடங்களில் என்.ஐ.ஏ. எனப்படும் தேசிய புலனாய்வு முகமை அதிகாரிகள் தீவிர சோதனை நடத்தியுள்ளது.

ஆந்திரா, தெலங்கானா மாநிலங்களில் நக்ஸலைட்களின் நெருங்கிய உறவினர்கள், அவர்களது ஆதரவாளர்கள், சில தன்னார்வ தொண்டு அமைப்பினர், வழக்கறிஞர்களின் வீடுகள் மற்றும் அலுவலகங்களில் என்.ஐ.ஏ. அதிகாரிகள் நேற்று காலை முதல் மாலை வரைதீவிர சோதனை நடத்தியுள்ளனர்.




ஆந்திரா, தெலங்கானாவில் மொத்தம் 60 இடங்களில் ஒரே நேரத்தில் தேசிய புலனாய்வு முகமை அதிகாரிகள் நடத்திய இந்த சோதனையில், பல்வேறுமுக்கிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என கூறப்படுகிறது.


# மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமனுடன் அண்ணாமலை சந்திப்பு!



அ.தி.மு.க. – பா.ஜ.க. கூட்டணி முறிவு விவகாரம் தொடர்பாக டில்லியில் மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமனை அண்ணாமலை நேற்று சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

அத்துடன், அண்ணாமலைக்கு பாஜக மூத்த தலைவர்கள் பல்வேறு அறிவுரைகளை வழங்கியுள்ளனர் என கூறப்படுகிறது. அண்ணாமலை அளித்த விளக்கங்களை, அமித் ஷாவிடம் நிர்மலா சீதாராமன் அறிக்கையாக தாக்கல் செய்ய இருக்கிறார். அதன் அடிப்படையில், அடுத்தகட்ட நடவடிக்கைகளை பா.ஜ.க. மேலிடம் எடுக்கும் என்று கூறப்படுகிறது.

# கிரின்லாந்தில் பிறப்புக் கட்டுப்பாடு: இழப்பீடு கோருகின்றனர் பெண்கள்



அரசாங்கத்தின் தன்னிச்சையான பிறப்புக் கட்டுப்பாட்டுக்கு எதிராக கிரின்லாந்து பெண்கள் இழப்பீட்டை கோரியுள்ளனர்.

1960 ஆம் ஆண்டின் இறுதிக் காலப்பகுதியில் டேனிஸ் காலனித்துவத்தின் கீழ் 4 ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்ட பெண்களுக்கு பிறப்புக் கட்டுப்பாட்டுக்கான சாதனங்கள் பொருத்தப்பட்டிருந்தன என தெரிவிக்கப் படுகின்றது.

எவ்வாறாயினும் அவர்களில் பெரும் பாலான பெண்களுக்கு அது குறித்த அறிவு இருந்திருக்கவில்லை என்பதுடன் அனுமதியின்றியும் பொருத்தப்பட்டுள்ளன என குறிப்பிடப்படுகின்றது.

இதனால் பல பெண்கள் உடல் மற்றும் உள ரீதியான தாக்கங்களை எதிர்நோக்கியுள்ளனர் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

கிரின்லாந்தின் சனத்தொகையினை கட்டுப்படுத்த அரசாங்கம் இவ்வாறு தன்னிச்சையான நடவடிக்கையினை கையாண்டுள்ளது என இந்த பெண்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

எனவே இதற்கான இழப்பீட்டை வழங்க வேண்டும் என அவர்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# ஸ்பெயினில் இரவு விடுதிகளில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 13 பேர் உயிரிழப்பு!

ஸ்பெயினில் தென்கிழக்கு நகரான முர்சியாவில் உள்ள இரவு விடுதிகளில் மூன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 13 பேர் உயிரிழந்துள்ளனர்.

பிறந்தநாளைக் கொண்டாட அங்கு கூடியிருந்த குடும்ப உறுப்பினர்களும் இறந்தவர்களில் அடங்குகின்றனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இருப்பினும் இடிபாடுகளில் பலர் சிக்கி இருக்கலாம் என்பதனால் மீட்புப் பணியாளர்கள் தொடர்ந்தும் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

உடல்களை அடையாளம் காண கால அவகாசம் தேவை என்றும் தீ விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது




எனவும் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

கடந்த 1990 இல், ஸ்பெயினின் வடகிழக்கு நகரமான ஜராகோசாவில் இரவு விடுதியில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 43 பேர் உயிரிழந்திருந்தனர் என்பது குறிப் பிடத்தக்கது.

# நைஜீரியாவில் இடைநிறுத்தப்பட்டது தொழிற்சங்கங்களின் போராட்டம்!




வாழ்க்கைச் செலவு நெருக்கடியை தீர்க்க அதிக ஊதியங்களைக் கோரி முன்னெடுக்க திட்டமிடப்பட்ட கால வரையற்ற வேலைநிறுத்த போராட்டத்தை நைஜீரியாவின் இரு தொழிற்சங்கங்கள் நிறுத்தியுள்ளன.

தலைநகர் அபுஜாவில் தொழிற்சங்கங்களுக்கும் மத்திய அரசாங்கத்திற்கும் இடையே நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற பல மணிநேர பேச்சை அடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர்களின் கோரிக்கைகளை 30 நாட்களுக்குள் நிறைவேற்றும் வகையில் அரசாங்கத்துடன் ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது என தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

எரிபொருள் மானியங்களை அகற்றுவது உட்பட சமீபத்திய அரசாங்கக் கொள்கைகள் வாழ்க்கைச் செலவு நெருக்கடியை மோசமாக்கியுள்ளதால் 260 டொலர்களை மாதாந்த ஊதியமாக தொழிற்சங்கங்கள் கோரியுள்ளன.